செய்தி வெளியீடு எண்:961 நாள்:28.10.2021

செய்தி வெளியீடு

**பொதுத் துறை நிறுவனங்களான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் ஆகியவற்றின் சார்பில் பங்கு ஈவுத் தொகையாக ரூபாய் 155 கோடியே 26 இலட்சத்து 67 ஆயிரத்து 718-க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்கள்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களிடம் இன்று (28.10.2021) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், தமிழ்நாடு அரசுக்கு 2020-21ஆம் ஆண்டிற்கான பங்கு ஈவுத் தொகையாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) சார்பில் 77 கோடியே 93 இலட்சத்து 33 ஆயிரத்து 18 ரூபாய்க்கான காசோலையும், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (சிப்காட்) சார்பில் இடைக்கால ஈவுத் தொகையாக 70 கோடி ரூபாய்க்கான காசோலையும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் 7 கோடியே 33 இலட்சத்து 34 ஆயிரத்து 700 ரூபாய்க்கான வங்கி வரைவோலை, என மொத்தம் 155 கோடியே 26 இலட்சத்து 67 ஆயிரத்து 718 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, தொழில் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. பங்கஜ் குமார் பன்சல், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.த. ஆனந்த், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

•••••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9